பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 10

# பாடசாலை மாணவர்களின் கல்வியில் மண் அள்ளிப்போடும் அரசாங்கமும், அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கமும்

இலங்கை கல்வி நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்கும் ஓர் நாடு. எவ்வாறெனில் இலவசக் கல்வி, இலவச சீருடை, இலவச மதிய உணவு, இலவச பாதணிகள், மாணவர்கள் காப்புறுதி என அனைத்து விடயங்களிலும் அரசு இலவச திட்டங்களை வகுத்து, கல்வித்துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய கியூபா போன்ற நாடுகள் போல, இலங்கையும் அர்ப்பணிப்புடன் எதிர்கால சந்ததியின் முன்னேற்றத்திற்கு ஆக்கபூர்வமாக செயற்பட்டு வரும் நிலையில், 2019ஆம் ஆண்டு... (03ஆம் பக்கம் பார்க்க...)







## இன்று ஆரம்பமாகிறது ஐ.நா கூட்டத்தொடர், தீர்வுகளின்றி தொடரும் தமிழினப் போராட்டங்கள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் இன்றைய தினம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. எனினும். இக்கூட்டத்தொடரின் முதலாவது தினத்திலேயே இலங்கை தொடர்பான மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை முன்வைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது... (03 ஆம் பக்கம் பார்க்க...)



## அரசின் 20 இலட்சம் மரநடுகை வேலைத்திட்டம் ஆரம்பித்து வைப்பு



ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் எண்ணக்கருவின் கீழ், கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் அனுசரணையுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ், நெடுஞ்சாலைகளை அழுகுபடுத்தும் அரசின் 20 இலட்சம் மரநடுகை வேலைத்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக மாகாணப் பணிப்பாளர் எம்.பி.அலியார் தலைமையில் இம்மரநடுகை வேலைத்திட்டமும், கிராமிய பாலங்கள் அபிவிருத்தியின் முன்னேற்றம்... (03 ஆம் பக்கம் பார்க்க...)



அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரின் மகளிர் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் கனடாவைச் சேர்ந்த 18 வயதான வீராங்கனை எம்மா ரெடுகானு (Emma Raducanu) வெற்றி பெற்றுள்ளார். (03ஆம் பக்கம் பார்க்க...)

உலகக்கிண்ண ஆடவர் இருபது20 போட்டிக்கான இலங்கை குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (03ஆம் பக்கம் பார்க்க...)



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## உள்ளூர் உற்பத்திகளுக்கு முக்கியத்துவம்

தற்போது நாட்டினுடைய நிலையினைக் கருத்திற் கொண்டு அரசாங்கமும். மக்களும் உள்ளூர் உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தற்போது அரசினால் பல பொருட்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் இந்தத் தீர்மானம் ஒரு நாட்டிற்குத் தேவையானது எனினும். இத் தீர்மானத்தினை இப்போது மேற்கொண்டிருப்பதானது நாட்டில் ஆபத்தை உண்டுபண்ணும். இந்நாட்டை ஆட்சிசெய்த கடந்த கால அரசுகள் உள்ளூர் உற்பத்திகளை பெருமளவில் மக்களுக்கான சலுகைகளை. மானியங்களை வழங்கி அதிகரித்திருப்பின் இந்நாட்டில் இன்றைய பொருளாதார வீழ்ச்சி என்பது காணாமல் போயிருக்கும். அந்நிய நாடுகளிடம் இலங்கையை அடகு வைத்திருக்கவும் தேவையில்லை. கடன் வாங்கியிருக்கவும் தேவையில்லை.

இன்றும் உள்ளூர் உற்பத்திகள் இடம்பெறுகின்றன. ஆனால் மிகக் குறைவு. அதுவும் பெரும்பாலான உற்பத்திகளை சிங்கள மக்கள் மேற்கொள்கிறார்கள். தமிழர் பிரதேசம் உள்ளூர் உற்பத்திகளை மேற்கொண்டது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில். ஆனால் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரான காலப்பகுதியில் உள்ளூர் உற்பத்திகள் பெருமளவில் இல்லை. ஆங்காங்கே சிலர் ஈடுபடுவதைக் காணலாம்.

உர இறக்குமதியினைத் தடை செய்திருப்பதானது நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும் என்று வல்லுனர்கள் கூறுகின்றனர். நெல். பெருந்தோட்டப் பயிர்கள். மரக்கறி வகைகளை இயற்கை உரம் கொண்டு செய்யலாம் ஆனால் உடனடியாக இச் செயற்பாடுகள் சாத்தியமற்றது. அதற்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி தேவை. திடீரென உரம் போடுவதை நிறுத்திவிட்டு இயற்கைப் பசளைகளை இட்டு இந்தப் பயிர்களை உற்பத்தி செய்ய முடியாது. உள்ளூர் உற்பத்திகள் அதிகரித்தால் வேலைவாய்ப்பும் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் உயரும். கிராமங்கள் அபிவிருத்தியடையும்.

## இரண்டாவது போட்டியிலும் தென்னாபிரிக்கா வெற்றி




இலங்கை மற்றும் தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபது20 போட்டியில் தென் ஆபிரிக்க அணி 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது. கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமான இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை அணி 18.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 103 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி வீரர்கள் பிரகாசிக்க தவறியிருந்த நிலையில் அதிகபட்சமாக குசல் ஜனித் பெரேரா 30 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் தென் ஆபிரிக்க அணியின் எய்டன் மர்க்ரம் (21 – 3) மற்றும் தப்ரைஸ் ஷம்சி (20–3) தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இந்நிலையில், 104 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி 14.1 ஓவர்களில் .1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 105 ஓட்டங்களை பெற்று போட்டியில் வெற்றி பெற்றது. அணியின் சார்பில் அதிகபடியாக க்வின்டன் டி கொக் 58 ஓட்டங்களைப் பெற்றார். அதற்கமைய, 3 போட்டிகளைக் கொண்ட இந்த இருபது 20 தொடரை 2–0 என்ற அடிப்படையில் தென் ஆபிரிக்க அணி கைப்பற்றியது.

**நாட்டில் மேலும் 144 கொவிட் மரணங்கள் நேற்று (12.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,296 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 2642 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 485,922 ஆக அதிகரித்துள்ளது.**

## காணாமல் போன எனது தந்தையை மீட்டுத்தாருங்கள் – மகன் உருக்கமாக வேண்டுகோள்

கொத்மலை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சாஜனாக கடமையாற்றி வந்த சுப்பையா இளங்கோவன் சுகயீனம் காரணமாக கடந்த 08 ஆம் திகதி கம்பளை மாவட்ட வைத்தியசாலையில் உறவினர்களினால் அனுமதிக்கப்பட்ட நிலையில் அன்றைய தினமே வைத்தியசாலையிலிருந்து காணாமல் போயுள்ளர். இதனையடுத்து கம்பளை பொலிஸ் நிலையத்தில் உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் இதுவரையில் அவர் கண்டுபிடிக்கப்பட்டவில்லை எனவும் நான்கு நாட்களாக தேடப்பட்டு வரும் எனது தந்தையை மீட்டுத்தாருங்கள் என மூத்த மகனான இளங்கோவன் அபிநாத் தெரிவித்தார்.

நோட்டன் ஒஸ்போன் தோட்டத்தை பிறப்பிடமாகவும் தலவாக்கலை பூண்டுலோயாவை வசிப்பிடமாகவும் கொண்ட மூன்று பிள்ளைகளின் தந்தையான 56 வயதுடைய செல்லையா இளங்கோவன் கொத்மலை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சாஜனாக கடமையாற்றிவரும் சிறந்த கரப்பந்தாட்ட வீரராவார்.

இவர் மலையக அரசியல்வாதிகளின் பாதுகாவலராகவும் கடமையாற்றியவராவார். இவர் கடந்த மாதம் 10 ஆம் திகதி கொரோனா தொற்றுக்குள்ளானதையடுத்து இவர் உட்பட்ட குடும்பத்தினர் அனைவரும் சுகாதார பரிசோதகர்களினால் 14 நாட்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டு அதன் பின்னர் மேற்கொண்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த 07 ஆம் திகதி திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக 08 காலை 06 மணியளவில் 1990 அவசர அழைப்பு நோயாளர் காவு வண்டியில் கம்பளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் 10.30 மணி வரை நானும் சின்னம்மாவும் வைத்தியசாலையில் இருந்துவிட்டே வந்தோம். அதன் பின்னர் பிற்பகல் 2 மணியளவில் வைத்தியசலையிலிருந்து தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட எனது தந்தை வைத்தியசாலையிலிருந்து தப்பி சென்று விட்டதாக அறிவித்தனர்.

எனது தந்தை வைத்தியசாலையிலிருந்து தப்பியோட அவசியம் இல்லை. எனது தந்தையை மீட்டுதாருங்கள் என உருக்கமாக மூத்த மகன் இளங்கோவன் அபிநாத் கோட்டுக்கொண்டார். இச் சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கையில், பொலிஸ் சாஜன் ஆன இளங்கோவன் நோயுற்ற நிலையில் பயம் காரணமாக நண்பர்கள் அல்லது உறவினர்கள் வீடுகளுக்கு சென்றிருக்கலாம். கம்பளை மற்றும் கொத்மலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தனர்.

## அரசின் 20 இலட்சம்...

பற்றிய நிகழ்வுகள் பொத்துவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுகளில், கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திஸாநாயக்க கலந்துகொண்டு இவ்வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்ததுடன், நிர்மாணிக்கப்பட்டுவரும் கிராமிய பாலங்களையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். இதில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அம்பாறை பிரதம பொறியியலாளர் கே.எல்.எம்.இஸ்மாயில், நிறைவேற்று பொறியியலாளர்களான எம்.ஐ.நஹ்முடீன், ரி.சிவசுப்ரமணியம், எம்.ஐ. சஜீர் உள்ளிட்ட அதிகார சபையின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளும் கலந்துகொண்டனர். **(பைஷல் இஸ்மாயில்)**

## ஐ.நா கூட்டத்தொடர் இன்று...

இன்று ஆரம்பமாகவுள்ள 48வது கூட்டத்தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான தீர்மானமானது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46வது கூட்டத்தொடரின் போது நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த தீர்மானத்திற்கு அமைவாக இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த வாய்மூல அறிக்கையினை மனித உரிமைகள் ஆணையாளரால் இன்று ஆரம்பமாகவுள்ள கூட்டத்தொடரில் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான உறுப்பு நாடுகளின் விவாதமானது நாளையதினம் செவ்வாய்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழ்க் கட்சிகள் தேர்தல் வரும்போது மாத்திரமே கட்சி ஒன்றிணைவு என சந்திப்புக்களை வைப்பதும், ஊடக அறிக்கைகளை வெளியிடுவதும், ஆவணங்களில் கையொப்பமிடுவதும் தொடர்ந்து வருகிறது.

யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகளைக் கடந்துவிட்ட பின்பும் தமிழ்க் கட்சிகள் பழையதை மறந்துவிட்டு, ஆயுத ரீதியாக போராடிய விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர், முரண்பாடுகளைக் களைந்து, அஹிம்சை ரீதியிலான தமிழினத்திற்கான விடியலுக்காக, தமிழினத்தின் எதிர்கால இருப்புக்காக தேவையான அடிப்படை விடயமான ஒற்றுமை என்கிற பேச்சுக்கே இடமில்லாமல், பேச்சளவில் மாத்திரம் ஒன்றிணைகிறோம் எனக் கூறிக்கொண்டு, வெளியில் வந்து மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதே இன்றும் தொடர்கின்றது. ஆளுக்கொரு கட்சியை உருவாக்கி வைத்துக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர். தேர்தல் அரசியலையே தொடர்ந்தும் செய்து வரும் இவர்களில் பலருக்கு தமிழ் மக்கள் விரைவில் பாடம் புகட்டவேண்டும். தமிழ் மக்களுக்கானதொரு சரியான தலைமைத்துவம் விடுதலைப்புலிகளின் பின்னர், இதுவரையில் கிடைக்காமல் இருப்பது துரதிஸ்டவசமே என்று கூறுபவர்கள் எம் மத்தியில் இல்லாமலில்லை.

## அமெரிக்க பகிரங்க டென்னிஸ்...

நியூயோர்க்கில் நகரில் இடம்பெற்ற இப்போட்டியில் எம்மா ரெடுகானுடன் கனடாவைச் சேர்ந்த பிறிதொரு வீராங்கனையான 19 வயதுடைய லேலா பெர்ணான்டஸ் (Leylah Fernandez) போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. ஒரு மணி நேரமும் 51 நிமிடங்கள் வரை நீடித்த இந்த போட்டியில், 6-4, 6-3 என்ற செட் கணக்கில் லேலாவை வீழ்த்தி ரெடுகானு வெற்றி பெற்றுள்ளார்.

### உலகக்கிண்ண ஆடவர் இருபதுக்கு20...

அதற்கமைய பெயரிடப்பட்டுள்ள வீரர்களின் விபரங்கள் வருமாறு. தசுன் ஷானக்க (தலைவர்), தனஞ்சய டி சில்வா (உப தலைவர்), குசல் பெரேரா, தினேஸ் சந்திமால், அவிஷ்க பெர்னாண்டோ, பானுக ராஜபக்ஷ, சரித் அசலங்க, வனிந்து ஹசரங்க, கமிந்து மெண்டிஸ், சாமிக கருணாரத்ன, மஹீஷ் தீக்ஷன, பிரவீன் ஜயவிக்ரம, நுவன் பிரதீப், துஷ்மந்த சாமீர, லஹிரு மதுஷங்க, லஹிரு குமார, பினுர பெர்னாண்டோ, அகில தனஞ்சய, புலின தரங்க ஆகியோர் இவ் குழாத்தில் இடம்பெற்றுள்ளனர்.

## பாடசாலை மாணவர்களின்...

கொரோனா வைரஸ் கொகுரத்தால் மாணவர்களின் கல்வியில் பாரிய சிக்கல் தோன்றியுள்ள நிலையில் கடந்த இரண்டு வருடங்களாக பாடசாலைகள் காலக்கிரமத்தில் செயற்பட முடியாமல் கல்விசார் நிறுவனங்கள், பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில், அதற்கு மாற்றீடாக மாணவர்களின் கல்வியை முன்னெடுக்க இணைய வழி கற்பித்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக செயற்பட்டு வந்த நிலையில், அதிபர் ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டங்கள் ஆரம்பமாகின. இந்தப் போராட்டத்தின் தன்மை யாதெனில் சம்பளத்தை கூட்டச்சொல்லி கேட்கவில்லை என்றும், அதிபர் ஆசிரியர்களுக்குள் உள்ள சம்பள முரண்பாடுகளை தீர்க்கக் கூறியும் இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. எவ்வாறு எனில் தரம் I தகுதியுடைய அதிபர் ஒருவருக்கு வழங்கப்படும் அடிப்படை சம்பளத்தை விட சாதாரண ஆசிரியருக்கு அதிக சம்பளம் வழங்கப்படுகிறது. இவ்வாறான சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வுகான பல தடவைகள் அரசுடன் பேசியும் எதுவித தீர்வும் கிடைக்காத நிலையில் இப்போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றது.

அரசாங்கமும் பிரச்சினைக்கு தீர்வு காணுவதை விட்டுவிட்டு கல்வி அமைச்சரை மாற்றியிருக்கிறது. இவ்வாறு அமைச்சர்களை மாற்றுவது தீர்வாகாது. புதிதாக பதவியேற்ற கல்வி அமைச்சர் 5000 மேலதிக கொடுப்பனவு வழங்குவதாக உறுதியளித்துள்ளார். இம் முரண்பாட்டை தற்பொழுது தீர்க்க முடியாது. நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. ஆகவே அடுத்த பாதீட்டில் இப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வை பெற்றுத்தருவதாக கூறியுள்ளார். இவ்வாறு 5000 மேலதிக கொடுப்பனவு ஆனது திடீரென நிறுத்துவதற்கு சாத்தியங்கள் உள்ளதாகவும், அவ்வாறான மேலதிக கொடுப்பனவு தேவை இல்லை என்றும், இக்கொடுப்பனவை சம்பளத்தில் சேர்த்து தந்தால் ஓரளவு பிரச்சினை தற்காலிகமாக தீர்க்க முடியும் என்றும் கூட அதிபர் ஆசிரியர்களிடம் இருந்து கருத்துக்கள் வெளிவருகின்றது.

இவ்விரு பகுதியினரின் போராட்டத்தில் சிக்கித்தவிப்பது அப்பாவி மாணவர்கள். இப்போராட்டத்திற்கு பின்னால் சில அரசியல் சக்திகள் இருக்கலாம், அரசும் விடாக்கொண்டன் போல் இருக்காமல் இதற்கு உடனடித் தீர்வை வழங்கி, மாணவர்களின் எதிர்கால கல்வி நிலையை கருத்திற்கொண்டு செயற்படவேண்டும். அதிபர் ஆசிரியர்களின் சங்கங்களும் இவ்விடயத்தில் தற்பொழுது உள்ள மிக இக்கட்டான நிலையைக் கருத்திற்கொண்டு, ஓர் நெகிழ்வுத் தன்மையை பிரயோகிக்கவேண்டும் என்பதுடன், ஒவ்வொரு அதிபர் ஆசிரியர்களும் தங்களுடைய பிள்ளைகளும் இதனால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை நினைவில் நிறுத்தி, கொரோனா காலகட்டம் ஓரளவு சீராகி நாடு முற்றாக திறக்கப்பட்டு இயல்பு நிலை ஓரளவுக்கு திரும்பும் வரை மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு, இணைய வழி கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதுடன், எதிர்கால கல்விச் சமூக சந்ததியையும், நற்பிரஜைகளையும் உருவாக்கும் மிகப்பெரும் பொறுப்பு அதிபர், ஆசிரிய சமூகத்தையே சேரும். ஆகவே காலத்தின் தேவை கருதி செயற்படவேண்டும். அரசும் மிக விரைவில் இதற்கு சாதமான தீர்வை வழங்கவேண்டும். சரியான சம்பளப் பொறிமுறை ஒன்றினை உருவாக்கவேண்டும் என்பதே சகல மாணவர்களின் பெற்றோர்களின் எதிர்பார்ப்பாகும்.

## தலிபான்கள் வெற்றியால் பயங்கரவாதிகள் துணிவுடன் செயல்படும் ஆபத்து



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், ஐ.நா, சபையின் பொதுச் செயலர் அன்டோனியோ குட்டரஸ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது, ஆப்கனில் தலிபான் பெற்ற வெற்றியை பார்த்து, உலகின் பிற பகுதிகளில் உள்ள பயங்கரவாத அமைப்புகள் துணிவுடன் செயல்படும் ஆபத்து உள்ளது.

உதாரணமாக, ஆபிரிக்காவின் சாஹல் பிராந்தியத்தில் பயங்கரவாத சவாலை எதிர்கொள்ளும் அளவிற்கு அங்கு பாதுகாப்பு கட்டமைப்பு இல்லை. இறப்பை நல்ல விஷயமாக கருதி எந்த சூழலிலும் உயிரைக் கொடுக்கும் கும்பல், அது சிறியதாகவே இருப்பினும், அதன் முன் ராணுவம் கூட நிற்க முடியாது. இதை ஆப்கன் சம்பவம் உணர்த்தியுள்ளது. ஏழு நாட்களில் ஆப்கன் ராணுவத்தினர் மாயமாகிவிட்டனர்.

பயங்கரவாதத்திற்கு எதிராக பல நாடுகள் இன்னும் தயாராகவில்லை என்பது கவலை அளிக்கிறது. அதனால், பயங்கரவாதத்திற்கு எதிரான நாடுகளின் ஒற்றுமை மேலும் வலுப்பெற வேண்டும். ஆப்கான், சர்வதேச உறவுகளில் குறிப்பிடத்தக்க வகையில் பங்கு பெறவேண்டும். அதற்கு தலிபான் அரசுடன் பேச்சு நடத்துவது இன்றியமையாதது என அவர் கூறினார்.

## தமிழகத்திற்கு புதிய கவர்னர்



தமிழகத்திற்கு புதிய கவர்னர் நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு மூத்த அரசியல்வாதி கவர்னராக வருவார் என எதிர்பார்த்திருந்த பா.ஜ.கவினருக்கு. பிரதமர் அதிர்ச்சி வைத்தியம் அளித்துள்ளார்.

புதிய கவர்னர் ஆர்.என். ரவி. ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ்.. அதிகாரி. நாகாலாந்து கவர்னராக இருந்தவர். உளவுத்துறையில் சிறப்பு அதிகாரியாக பணியாற்றியவர். தென் மாநில அரசியலை நன்கு அறிந்தவர். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலின்சிஷ்யர். இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகமாகியுள்ள நிலையில். இந்த விவகாரத்தை நன்கு கண்காணிக்கவே ரவியை பிரதமர் நியமித்துள்ளார் என்கின்றனர். தமிழகத்தில் பிரிவினைவாதம் தலைதூக்காமல் இருக்கவும் இவர் நியமனம் உதவும் என சொல்லப்படுகிறது. அரசியல் ரீதியாக ஒரு விஷயம் அலசப்படுகிறது. 'கவர்னர் ரவி நேர்மையானவர் தேவையில்லாத அரசியல் விவகாரங்களில் தலையிடமாட்டார். இவரை கவர்னராக நியமித்ததன் மூலம் தி.மு.க.. அரசுடன். மத்திய அரசு சுமுகமாக செயல்படவேண்டும் என பிரதமர் விரும்புகிறார்' என்பது தெரிகிறது என்கின்றனர் டில்லி பா.ஜ.க தலைவர்கள்.

## ஈ-ராக் விமான நிலையம் மீது தாக்குதல்

ஈராக் விமான நிலையம் மீது 'ட்ரோன்' மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில். இந்த தாக்குதலை ஐ.எஸ். பயங்கரவாதிகள் அல்லது ஈரான் நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஈராக் நாட்டின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக குர்திஷ் மாகாணம் உள்ளது. அம் மாகாணத்தின் தலைநகர் எர்பிளில் சர்வதேச விமான நிலையம் உள்ளது. குறித்த விமான நிலையத்தில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் தங்கள் படையினரை நிலைநிறுத்தி வைத்துள்ளன. ஈராக்கில் செயல்பட்டு வரும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில். எர்பிள் விமான நிலையத்தை குறிவைத்து நேற்று ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 'ட்ரோன்' மூலம் வெடிகுண்டுகள் விமான நிலையம் மீது வீசப்பட்டதாக கூறப்படும் அதேவேளை. இந்த தாக்குதலில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்ற முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. எனினும் . இந்த தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி வருவதாக குர்திஷ் மாகாண பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.




## மியன்மாரில் வெடித்தது மோதல்

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்தை ஒடுக்கும் நடவடிக்கையில் இராணு வம் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் இதுவரை 1,058 பேர் உயிரி ழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

மியன்மாரில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாக தெரிவித்து கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆட்சியை கைப்பற் றிய இராணுவம், நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி உள்ளிட்ட முக்கிய தலைவர்களை கைது செய்து சிறை வைத்தது.

இதனை தொடர்ந்து இராணுவ ஆட்சிக்கு எதிராக அங்கு மாபெரும் போராட்டம் வெடித்தது. நாட்டில் ஜனநாயகத்தை மீட்டெடுக்க கோரியும், சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தியும் பல் லாயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நட த்தி வருகின்றனர்.

அதேவேளை இராணுவ ஆட்சிக்கு எதிராக பல்வேறு கிளர்ச்சியாளர் குழுக்களும் உருவாகியுள்ளன. இந்த குழுக்களுக்கும், இராணுவத்திற்கும் இடையே அவ்வப்போது மோதல் நடைபெற்று வருகிறது.

இதனால் பலர் மியன்மாரை விட்டு வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். இந்நிலையில், மியன்மார் இராணுவத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேற்று (12) திடீரென துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இந்த மோதலில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் படு காயமடைந்துள்ளனர்.